
டி.கே.எஸ்
சகோதரர்கள்
நாடகம்
இராஜராஜ
சோழன்
எழுதியது: அரு. இராமநாதன்

# C. N. எத்திராஜ் & கம்பெனி

( சில்லறை ஜவுளி வியாபாரம் )

17, கிடங்குத் தெரு

கிளை : 28, கிடங்குத் தெரு, மதராஸ் —1

*

கருத்துக்கு விருந்தாகவும் கண்ணைப் பறிக்கும் பல கலர்களில் புதுப் புது பார்டர்களும் நவீன முறையில் தயாரிக்கப்பட்ட பல ஊர் பட்டுநூல் & மில் ஜவுளி ரகங்களும் அவரவர் மனதிற் கிசைந்தபடி மலிவாகவும் சாய உத்திரவாதமுடனும் எங்களிடம் கிடைக்கும்.

ஒருமுறை விஜயம் செய்தால் உண்மை விளங்கும்.

# C. N. ETHIRAJ & CO.,

SILK COTTON & FANCY PIECE GOODS MERCHANTS

17, GODOWN STREET

Branch : 28, GODOWN STREET, MADRAS — 1

டி. கே. எஸ். சகோதரர்களின்

# இராஜ ராஜ சோழன்

## தமிழரின் பொற்காலப் பெருவரலாற்றில் ஒரு சிறப்புமிக்க பொன் ஏடு

❊

**நாடகக் கதை—வசனம்**

அரு. இராமநாதன்

('காதல்' ஆசிரியர்)

❊

**பாடல்கள்**

புத்தனேரி ரா. சுப்பிரமணியன்

❊

**நடன அமைப்பு**

'நாட்டிய கலா கேசரி' வழுவூர் பி. ராமையா பிள்ளை

❊

**இசை அமைப்பு**

எம். கே. ஆத்மநாதன்

❊

**காட்சி ஓவியம்**

வி. மாதவன் பிள்ளை—தர்மராஜ்

---

டி.கே.எஸ். சகோதரர்கள், 139, லாயிட்ஸ் ரோடு, சென்னை-6
போன்: 85260.

# டி. கே. எஸ். சகோதரர்களின்
## நாடகக் குழுவினர்

### நடிகர்

டி. கே. சண்முகம் — டி. ராஜப்பா
டி. கே. பகவதி — என். ஆர். ராமலிங்கம்
டி. என். சிவதாணு — எம். கருப்பையா
கே. ஆர். சீதாராமன் — எம். சுப்பையா
எம். எஸ். கருப்பையா — டி. வி. சௌந்தரராஜன்
பி. எஸ். வெங்கடாசலம் — வி. எஸ். ஆறுமுகம்
டி. பி. சங்கரநாராயணன் — எஸ். வி. கணபதி
கே. கோவிந்தசாமி — வி. பி. நடராஜன்
டி. பி. ஹரிசிங் — எம். சுடலை
டி. வி. சண்முகம் பிள்ளை — எஸ். பி. வீராசாமி

### நடிகையர்

டி. ஏ. ஜெயலட்சுமி .... எம். ஹேமலதா
கே. எஸ். சந்திரா .... வசந்தா

### பின்னணி இசைக் குழுவினர்

கே. அபிராமசுந்தரி (பாடகி)

எம். எஸ். செந்திவேல் .... வி. எச். செல்லப்பா
எஸ். ஆர் கோவிந்தராஜன் ... ஏ. பி. ஷண்முகம்
பி. ஆர். கோபாலகிருஷ்ணன்....பி. எஸ். வாசுதேவன்

### ஒளி அமைப்பாளர்

டி. வி. ஆறுமுகம் .... பி. வாசுதேவன் .... தங்கம்

### காட்சி அமைப்பாளர்

டி. ஏ. பத்மநாப பிள்ளை .... என். ஸ்ரீதரன்
கேசவன் .... ரத்தினம் .... தனபால்

### ஆடை - அணி பணியாளர்


சி. கே. இராஜமாணிக்கம் .... டி. ஏ. காசிநாதன்

### ஒலிபெருக்கி

அசோசியேடட் ரேடியோ ஏஜன்சீஸ் (A.R.A.)
சென்னை & திருச்சி.

டி. கே. எஸ். சகோதரர்கள் என்று குறிக்கப்படும்

# நாடக நால்வர்



டி. கே. பகவதி, டி. கே. முத்துசாமி
டி. கே. சண்முகம், டி. கே. சங்கரன்

## டாக்டர் மு. வரதராசனார் அவர்களின்

# அணிந்துரை

'இராஜராஜ சோழன்' நாடகம் என் உள்ளம் கவர்ந்த அரிய நாடகமாகும். நாடகமேடை அரிய கலைவிருந்து நல்குவதோடு மட்டும் அல்லாமல், பல நூற்றாண்டுகட்கு முற்பட்ட பழந்தமிழ் நாட்டுப் பொன்னுலகத்திற்கு நம்மை அழைத்துச் செல்கின்றது. தமிழ் மண்ணின் பெருமையை நன்கு உணர்த்தி உள்ளம் பெருமிதம் கொள்ளச் செய்கின்றது. **''சோணாட்டுத் தமிழ் மண்ணை வணங்கினேனே''** *என்ற* இசை முழக்கம் செவியில் கேட்கும்போது இன்பத் தேன்வந்து பாய்ந்திட உள்ளம் குளிர்கின்றது.

நாடகத்தைக் கற்பனை வளம்பெற எழுதிய திரு அரு. இராமநாதன் அவர்களும், தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ற பாடல்கள் இயற்றிய கவிஞர் திரு புத்தனேரி ரா. சுப்பிரமணியம் *அவர்களும்* சிறந்த கலைத்தொண்டு புரிந்துள்ளனர். வழக்கம்போல் டி. கே. எஸ். சகோதரர்கள் தம் செந்தமிழார்வமும் சீரிய நடிப்புத் திறனும் விளங்க, இனிய கலைச் செல்வமாகத் தம் மேடையில் கலைக் கோயில் எழுப்பி யுதவுகின்றனர். இவற்றை எல்லாம் அறிமுகப்படுத்தி அப்போதைக்கப்போது நெஞ்சில் ஊறி அமுதம் பாய்ச்சும் அரிய பாடல்களின் தொகுப்பு இது. 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' முதலான சான்றோர் மொழிகளும், வள்ளுவரின் பொய்யா மொழிகளும் இந்த நாடகத்தில் பெற்றுள்ள விழுமிய இடங்களும் காட்சிகளும் மனக் கண்ணில் நின்று தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ் முன்னோரின் நாகரிகத்தையும் நெஞ்சில் ஒளிரச் செய்கின்றன.

திரு புத்தனேரிக் கவிஞரின் 'பொன்னி நாட்டு மன்னர் மன்னன் வாகை சூடினுன்' என்னும் வீர உணர்ச்சி ததும்பும் பாட்டும், நாடக மேடையில் பல முறை ஒலிக்கும் 'காத லெனும் சக்தியினைக் காலமெதும் வெல்லாது' என்னும் காத லின் ஆற்றலை உணர்த்தும் பாட்டும் மறக்க வொண்ணுத இசை விருந்துகளாகும். வாழ்க இத்தகைய கலைத்தொண்டு!

சென்னை - 30
18—10—55.

**மு. வரதராசன்**



நாடகாசிரியர்

**அரு. இராமநாதன்**



பாடல் புனைந்த கவிஞர்

**புத்தனேரி ரா. சுப்பிரமணியன்**

# இராஜ ராஜ சோழன்

## நாடக உறுப்பினர்கள்

| | |
|---|---|
| இராஜராஜன் | ...தமிழ்ப் பெருவேந்தன் |
| இராஜேந்திரன் | ...இராஜராஜனின் புதல்வன் |
| விமலாதித்தன் | ....வேங்கி நாட்டு மன்னன் |
| சக்திவர்மன் | ...விமலாதித்தனின் தமையன் |
| சத்தியாசிரயன் | ...இரட்டபாடி மன்னன் |
| பாலதேவன் | ...இராஜ தந்திரி (ஒற்றன்) |
| மதுராந்தகர் | ...சோழநாட்டு அமைச்சர் |
| நம்பியாண்டார் நம்பி | ....திருமுறை வகுத்த சிவனடியார் |
| மோனைப் புலவர், மேற்கோள் புலவர் | நகைச்சுவை நாவலர்கள் |
| குந்தவ்வையார் | ...இராஜராஜனின் தமக்கையார் |
| குந்தவி | ...இராஜராஜனின் புதல்வி |
| வீரமாதேவி | ...மதுராந்தகரின் தங்கை |
| பூங்கோதை | ....பணிப்பெண் |

மற்றும்

வணிகர் தலைவர், வேங்கி அமைச்சர், இரட்டபாடி ஒற்றன், திருவாய்க் கேள்வி, திருமந்திர ஓலைகள் நாயகம், குடிமக்கள், சோழ வீரர்கள், வேங்கி வீரர்கள், தேவாரம் ஓதுவோர், புலவர்கள், உடன் கூட்டத்து அதிகாரிகள் முதலியோர்.


கதை தொடங்கும் காலம்....கி. பி. 999.

# கதைச் சுருக்கம்

**த**ஞ்சையைத் தலைநகராகக் கொண்டு **இராஜராஜ சோழன்** செந்தமிழ் நாட்டை அரசாண்ட காலம். 'தென்ன பராக்ரம மும்முடிச் சோழன்' என்ற அவனது புகழ் புவனம் முழுதும் பரவி அவனது புலிக்கொடியும், கப்பற் படையும், வணிகர் தூதும், கங்கையும் கடாரமும் தாண்டி அடிவானத்திற்கு அப்பாலும் திக்விஜயம் புறப்படத் தயாராயிருந்த சமயம்,

வேங்கி நாட்டின் அரியணைக்காக மூத்த பரம்பரைக்கும் இளைய பரம்பரைக்கும் பூசல் நிகழ்ந்துகொண்டிருந்தது. அரசுரிமைக்குரிய மூத்த பரம்பரையை விரட்டி விட்டு, தான் சொல்கிறபடி ஆடக்கூடிய ஒரு பொம்மை அரசாக இளைய பரம்பரையை அரியணைமீது அமர்த்தி வைத்திருந்தான் மேலைச் சாளுக்கிய குலத்தைச் சேர்ந்த இரட்டபாடி **சத்தியாசிரயன்.** உரிமை இழந்த மூத்த பரம்பரையைச் சேர்ந்த **சக்திவர்மனே** இராஜராஜனுக்கு நெருங்கிய நண்பன். அதனால் இராஜராஜன் தன் ஒரே வீரத் திருமகன் **இராஜேந்திரன்** தலைமையின்கீழ் ஓர் படையுதவி அனுப்பி, வேங்கி அரியணையிலிருந்து இளைய பரம்பரையை விரட்டி விட்டு, சக்திவர்மனுக்கு முடிசூட்டினான். சக்திவர்மனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த அவன் தம்பி **விமலாதித்தன்** வீர உள்ளம் படைத்தவன். அவனுக்கே தன் மகள் **குந்தவியை**மணம் முடித்து வைக்கவேண்டும் என இராஜராஜன் எண்ணமிட்டான். விமலாதித்தனும் குந்தவியும் சிறு வயதில் விளையாடிப் பிரிந்தவர்கள் ஒருவரையொருவர் உள்ளூறக் காதலித்து வந்தவர்கள்.

இவர்களின் காதல் நிறைவேறாமல் முறிப்பதற்காக **பாலதேவர்** என்ற இராஜதந்திரி முயன்றார். அவரைக் கலந்தாலோசிக்காமல் எந்த வெளிநாட்டு விவகாரத்தையும் இராஜராஜன் தீர்மானிப்பதில்லை. இராஜராஜனிடம் அவ்வளவு செல்வாக்கு உள்ள அவரோ வேங்கிக்கும், சோழத்திற்கும் நேச உறவு ஏற்படாமல் தடுப்பதற்கென்றே இரட்டபாடி சத்தியாசிரய மன்னரால் இரகசியமாக அனுப்பப்பட்ட ஒற்றராவார். வேங்கி நாட்டில் சக்திவர்மனுக்குப் பிறகு விமலாதித்தன் முடி சூடியதும், தன் நாட்டைப் பலப்படுத்த ஒரு பெரும்படை தயாரித்தான். அதற்குத் தவறாக பாலதேவர் அர்த்தம் கற்பித்து, சோழ சாம்ராஜ்யத்திற்குத் தலைவாசல்போல் விளங்கும் வேங்கி நாட்டைத் தனி நாடாக விட்டு வைக்காமல், இராஜராஜனின் நேர் ஆட்சியின் கீழ்க் கொண்டு வருவதுதான் சரியான இராஜதந்திரம் என்றும் போதித்தார். அதையொட்டி ஏற்பட்ட சந்திப்பில் இராஜராஜனுக்கும் விமலாதித்தனுக்கு மிடையே வாக்குவாதம் முற்றி மனக்கசப்புடன் பிரிய நேர்ந்தது.



"நிலைபெற்றக் கலைக்கோயில் வாழ்க ! — நிழல்விழாக் கோபுர அழகென்றும் வாழ்க !"

இதற்கிடையில் இராஜராஜனின் பெருமதிப்பிற் குரிய அவனுடைய தமக்கையாரான குந்தவ்வைப் பிராட்டியார், இராஜராஜன் பெயரால் ஓர் கோயில் கட்டவேண்டுமெனக் கூறவே, இராஜராஜன் அவ்வாறே தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டி முடித்தான். அங்கே பெருவுடைப் பெருமான் சந்நிதியிலே தன் மகள் குந்தவியின் நடன அரங்கேற்றத்திற்கும் ஏற்பாடு செய்தான். அந்த நடன விருந்தைக் காண வேங்கி நாட்டிலிருந்து விமலாதித்தன் அழையாமலே வந்து சேர்ந்தான். குந்தவி ஆடிக் கொண்டிருக்கும்போது ' தாளம் தவறிவிட்டது ' என்று விமலாதித்தன் பரிகாசம் செய்யவே குந்தவி ஆத்திரம் கொண்டு குமுறினாள். அங்கே விமலாதித்தனுக்கும் இராஜராஜனுக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தின் முடிவாக இரு நாடுகளுக்குமிடையில் போர் மூளுகிறது.

போரில் விமலாதித்தனை உயிரோடு பிடித்து வரவேண்டும் என்று குந்தவி தன் தமையனை இராஜேந்திரனிடம் வாக்குறுதி வாங்கிக் கொண்டாள், அந்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காகவே போர்க்களத்தில் விமலாதித்தன் தோல்விகண்டும் வீர மரண மடையாமல் இராஜேந்திரன் கையில் சிறைப்பட்டான்.

பாலதேவரின் தூண்டுதலின்பேரில், சிறைப்பட்ட விமலாதித்தனைப் புலிக் கூண்டிற்குள் அடைத்து ஊர் நடுவே ஏளனத்திற்கு ஆளாகும்படி நிறுத்தி வைத்தான் இராஜேந்திரன். விமலாதித்தனின் அந்த நிலையைக் கண்டு மனமுருகினாள் குந்தவி. அவனை விடுதலை செய்வதற்காகத் தந்தையிடம் வாதாடினாள். ஆனால் இராஜராஜன் மறுத்துவிட்டான். வேறு வழியின்றிக் குந்தவி இரகசியமாக விமலாதித்தன் சிறைக்குச் சென்று தஞ்சைப் பெருவுடைப் பெருமான் சந்நிதியில் அவனைத் திருமணம் செய்து கொண்டாள்.


பின்னரும் குந்தவி மன்னரின் இசைவைப் பெற்று விமலாதித்தனை அடைய எவ்வளவோ முயற்சிகள் செய்தாள். இராஜராஜன் சிறிதும் மனம் உருகுபவனாய்த் தென்படவில்லை. கடைசியில் இராஜராஜன் பிறந்த தின விழாவையொட்டி அரசியல் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டபோது அவர்களில் ஒருவனாக விமலாதித்தனும் விடுதலை பெற்றான்.

குந்தவி விமலாதித்தனை அடைய என்ன தந்திரம் செய்தாள்?......

இராஜதந்திரி பாலதேவரின் சூழ்ச்சிகள் எவ்வாறு அம்பலமாயின?

இராஜராஜனின் மதிநுட்பமும் பெருமையும் எங்ஙனம் நிலை பெறுகின்றன?......

......அரங்கம் விடையளிக்கும்!......



கடவுள் சந்நிதியில் கடிமணம் புரிந்த காதலர்மீது காவலனின் கடுங்கோபம்.

## T. K. S. BROTHERS

PRESENT

# 'RAJA RAJA CHOZHAN'

(By **Aru. Ramanathan**.)

This historical play depicts the greatness of **Raja Raja Chozhan** (King of Kings) who had brought the whole of South India under one monarchy and established the United Tamil Kingdom. His glory and power mingled with the unparallelled Tamil Culture had spread beyond the Ganges in the North and even beyond the seas. Far off countries like China took pride to have his envoys.

With the unstinted help of Raja Rajan, Vengi Nadu gets freed from the tyranny of the Western Chalukya King **Rattapadi Sathyasirian**. **Vimaladityan** rightfully ascends the throne of Vengi.

**Vimaladityan** and Princess **Kundhavi** (the only daughter of Raja Rajan) fall in love with each other. Raja Rajan is also aware of this which meets with his indirect approval as well.

**Baladevan**, a spy of **Rattapadi Sathyasiriyan** who is waiting for an opportunity to win over the Southern power of Raja Rajan by cunnivance, pretends and serves as a Politicial Adviser to the Chozha King.

Raja Rajan constructs the big temple at Tanjore as desired by his beloved sister **Peria Kundhavai Pratty**. The dance "Arangetram" of princess Kundhavi takes place at the new temple. As aimed at by the spy Baladevan, Vimaladityan attends the performance as an uninvited guest and gets into trouble. The spy somehow manages to create misunderstandings between Raja Rajan and Vimaladityan. A war is thus declared between them.

But Raja Rajan in disguise of a "Rishi" meets Vimaladityan at his war camp and arranges to have a straight fight between Vimaiadityan and Prince **Rajendran** (Son of Raja Rajan) to avoid blood-shed and mass annihilation.

In the meantime Kundhavi gets a promise from her brother Rajendran to present Vimaladityan before her without any injuries. Rajendran keeps up his promise and brings Vimaladityan as a prisoner, of course with the unblemish consent of the latter.


Vimaladityan however faces untold sufferings as a prisoner due to the vagaries of the cunning political adviser Baladevan. Kundhavi fails in her attempt to convince her father and get the Vengi King married to her. She does not however lose heart but tries her best to see to the release of her lover.

Raja Raja Chozhan's birthday helps Kundhavi achieve her object. Tactfully she arranges to release Vimaladityan along with all the political prisoners as the King's birthday offer.

At the King's Durbar all are perplexed to see Vimaladityan appear as one of the poets to recite poems in honour of Raja Rajan. The King is however moved at the excellence of Vimaladityan's poems.

As a fitting prize for his poems, Vimaladityan demands Princess Kundhavi from the King! The King has necessarily to accede to the arguments of Vimaladityan.

At this juncture, the hypocrisies of the political Adviser Baladevan gets exposed. But everybody is surprised to know at the end that Raja Rajan was himself fully aware of all the hypocrisies of the foreign spy and that the King tolerated the evils simply to test the valour, love and other good qualities of his kindreds. The greatness of Raja Rajan is thus established.



# பாடல்கள்

## தொடக்கப் பாட்டு

இராகம்—பூபாளம்


கருமுகில் கிழித்தே கதிரவன் முளைத்தான்
இருளெனுந் திரையும் நீங்கியதே!
இரவியின் குலப்புகழ் ஓங்கியதே!

இராகம்—பிலஹரி

விரிகடல் கிழக்கிலும் மேற்கிலும் விளங்கத்
திருமலை வடக்கும் தெற்கிலே குமரியும்
வரையறை யாக்கி மா நிலம் காக்கும்
'தென்ன பராக்ரம மும்முடிச் சோழ'
மன்னன் தமிழக வரம்புகண் டனனே!

பாட்டுத் தொடர்

பொன்னி நாட்டு மன்னர் மன்னன்
வாகை சூடினன்—தமிழ்
அன்னை வண்ணச் சிலை யமைத்து
வாழ்த்துப் பாடினன்



இளவரசி குந்தவியின் எழில்மிகு நடனம்

## தமிழ்த் தாய் வணக்கம்

இராகம்-நாட்டைக்குறிஞ்சி                தாளம்-ஆதி

அன்பும் அறமும் வளர்த்தருள் புரியும்
அமிழ்தத் தமிழ்த் தாயே
பொன்முடி யாகத் தொல்காப்பியத்தின்
புகழைப் புனைந்தாயே.

இராகம்—கல்யாணி

நின்செவி அணியாய்க் குண்டலகேசியின்
நேர்த்தி நிலைத்ததுவே;
வண்கரத் தினிலே கங்கண மாக
வளையாபதி கண்டோம்.

இராகம்—காப்பி

எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும்
எழிற்சிந் தாமணியும்
கட்டழ குடைய மாலைக ளாகக்
கமழ்ந்திட வேகண் டோம்.

கோலச் சிற்றிடை தனில்மணி மேகலை
குலுங்கும் ஒலிகேட் டோம் ;
காலிற் சிலம்பொலி கருத்தைக் கவரக்
கைகுவித் தோம் அம்மா !

இராகம்—மோகனம்

மாந்தர்க் கெல்லாம் வாழ்க்கைத் துணையாம்
வள்ளுவன் குறளே,—நீ
ஏந்திய செங்கோல் என்பதை எண்ணி
இருநிலம் வியக்குதம்மா !

## நம்பியாண்டார் நம்பிகள்


திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்-அங்கமாலை

இராகம்—குறிஞ்சி தாளம்—ரூபகம்

தலையே ! நீ வணங்காய் !
தலை மாலை தலைக்கணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய் !

இராகம்—ரேகுப்தி

கண்காள் ! காண்மின்களோ !
கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசிநின்று ஆடும்பிரான்தனைக்
கண்காள் காண்மின்களோ !



நீதிபதி என். சோமசுந்தரம், திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், பிரதம மாகாண மாஜிஸ்ரேட் எஸ். ஏ. அய்யாசாமி செட்டியார். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஆகியோர் பாராட்டுகின்றனர்.

இராகம்—மோகனம்

செவிகாள் ! கேள்மின்களோ !
சிவன் எம்இறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்திறம் எப்போதும்
செவிகாள் கேள்மின்களோ !

இராகம்—அசாவேரி


நெஞ்சே ! நீ நினையாய்
நிமிர் புஞ்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய் !

இராகம்—ஹம்ச நாதம்

தேடிக் கண்டுகொண்டேன் !
திரு மாலொடு நான் முகனும் ;
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டு கொண்டேன் !



கலைஞர் சித்தூர் வி. நாகையா பாராட்டுகிறார். பாராட்டு வழங்கிய நாதசுரச் சக்கரவர்த்தி டி. என். இராஜரத்தினம் பிள்ளையும் அமர்ந்திருக்கிறார்.



எல்லோரையும் திகைப்பிலாழ்த்துகிருள், இளவரசி குந்தவி,

## நம்பியாண்டார் நம்பிகள்

### திருத்தொண்டர் திருஅந்தாதி

ஓடிடும் பஞ்சேந் திரியம் ஒடுக்கிஎன் உள்வினைகள்
வாடிடும் வண்ணம் நின்று எத்தவம் செய்தனன் வானினுள்ளோர்
சூடிடும் சீர்த்திருப் பாதத்தர் தொண்டத் தொகையினுள்ள
சேடர்தஞ் செல்வப் பெரும்புகழ் அந்தாதி செப்பிடவே.

### விமலாதித்தன்—குந்தவி

இராகம்—சாருகேசி | தாளம்—ஏகம்

**விமலாதித்தன்:-**

சிரித்த முகம் — அழகு - விரித்த முகம்
தேயாத முழுநிலவே!
ஓயாத ஆசைகாட்டிச் (சிரி)

**குந்தவி:—**

சிரித்த முகம் - அழகு - விரித்த முகம்
தேயாத நிலவெனக்கும்
ஓயாத ஒளிகொடுக்கும் (சிரி)

**விமலாதித்தன்:-**

ஓங்கும் ஆசைக் கன்னி—இன்பம்
ஊறும் அழகுப் பொன்னி

**குந்தவி:-**


வேங்கி நாட்டுச் சிங்கம்—குண
மேன்மை யுள்ள தங்கம்

**விமலாதித்தன்:-**

கட்டவிழ்த்த நறுமலரே!
கனிமொழியே, திருமகளே!

**குந்தவி:-**

ஒட்டுமாஞ் செடியெனவே
ஒன்றாக வாழ்ந்திடுவோம்— (சிரி)



பாமாலை பாடிய விமலாதித்தன் பாவையைப் பரிசு கேட்கிறுன்.

இராகம்—மணிரங்கு

விமலா: குந்தவி: காதலெனும் சக்தியினைக்
காலமெதும் வெல்லாது;
காதலெனும் சக்தியின்றேல்;
காசினியே நில்லாது !

கோதிலா வாழ்வு தரும்
காதலினை நம்பிடுவோம்;
காதலே தெய்வமெனக்
கவிபாடிக் கும்பிடுவோம்

## பின்னணிப் பாடல்

இராகம்—மலையமாருதம்


ஆலயம் எழுந்தது !
அற்புதம் நிகழ்ந்தது !
அறநெறி உயர்ந்ததுவே !
நீலவான் கொஞ்சியே
நிமிர்ந்தது கோபுரம் !
நிலைத்தது கலைப்புகழே !

பாட்டுத் தொடர்—தாளம்-ஆதி

நிலைபெற்ற கலைக்கோயில் வாழ்க !—அதன்
நிழல்விழாக் கோபுர அழகென்றும் வாழ்க !
உலகத்தைக் கவர்கின்ற சின்னம்—அதன்
உச்சியைப்போலவே உயர்ந்திடும் எண்ணம் (நிலை)

தருமத்தைக் காக்கின்ற கோயில்— நம்
தஞ்சைக்குப் புகழ்தரும் தனிப்பெருங்கோயில்
பெருவுடைப் பெருமானின் கோயில்—சோழப்
பெருவேந்தன் ராஜராஜன்கண்ட கோயில் (நிலை)

சிந்தனை தந்திடும் நந்தி—பல
சிற்பங்கள் காவியம் செப்பிடும் விந்தை
குந்தவைப் பிராட்டியின் ஆசை—கலைக்
கோயிலாய்த் தமிழரின் குலப்புகழ் பேசும் (நிலை)



அருளுருவமான குன்றக்குடி அடிகளாரையும், அறிவுருவமான பெரியார் ஈ. வெ. ரா. வையும், அன்புருவமான சர். பி. டி. இராசன் அவர்களையும், 'இராஜ ராஜ சோழன்' ஒரே மேடையில் ஒன்றுபடுத்திய காட்சி.
(மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா)

## கருவூர்த் தேவர்

### திருவிசைப்பா

இராகம்—பந்துவராளி

பன்னெடுங்காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித்திருக்க
என்னெடுங்கோயில் நெஞ்சு வீற்றிருந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்

இராகம்—தர்பார்

மின்னெடும் புருவத்து இளமயிலனையார்
விலங்கல் செய் நாடக சாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சுரத் திவர்க்கே

## குந்தவி நடனப்பாடல்


### திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

இராகம்—சாரங்கா தாளம்—ஆதி

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெம்மான் அவனுக்கே பிச்சி யானாள் !

இராகம்—காம்போதி

அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே !



தலைவர் ராஜாஜி நாடகத்தைப் பாராட்டுகிறார்.

**முத்துப்பல் கவிராயர்:—**

வெண்பா

ஏங்குகிறேன் பூங்கோதாய் என்னைவிட்டு நீயெங்கும்
நீங்கிடவே சற்றும் நினையாதே !—

**மேற்கோள் புலவர்:—**

—வீங்கியதோர்
மேருமலை இங்கிருக்க வெட்டவெளிப் பொட்டலினைச்
சேருவையோ செங்கரும்பே செப்பு !

## குந்தவ்வையார்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்—திருக்குறுந்தொகை

இராகம்-காமவர்த்தினி தாளம் - ஆதி

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்குஇள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

## திருமண வாழ்த்தொலி

திருக்குறள்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள; கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்.

மங்கலம் என்ப மனைமாட்சி ; மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

## அரசவை வாழ்த்துப் பாடல்

இராகம்—ஹம்சாநந்தி தாளம்—ஆதி

வாழ்க வாழ்கவே வாழ்கவே!
வள நாடாளும் மகிப நீடூழி!— (வாழ்க)
மேழி சிறந்து விளங்கு முறையினல்
மேன்மை கண்ட சோழமண்ட லாதிப! (வாழ்க)

## ஒரு புலவர்

இராகம்—சங்கராபரணம்

சங்கெறிந்தாடும் தரங்கமும் தாழையும்
செங்கதிர் தோன்றச் சிரித்திடு முளரியும்
தெங்கொடு பலாகதலி செந்நெலும் கன்னலும்
பொங்கு புனல் நாட! நின் செங்கோல் செழிக்கவே!
பொன்னிவளநாட! நின் செங்கோல் செழிக்கவே!

இராகம் ஆனந்தபைரவி

கொண்டலாடும் மணிக்கூட கோபுரமும்; தேன்
வண்டாடு சோலையும் வாவியும் பொன்னியும்
கண்டோர் வியக்கும் நற்கலைகளும் சூழ் சோழ
மண்டலத்தலைவ! நின் மாண்புகழ் வாழிய!
மண்கொண்ட தலைவ! நின் மாண்புகழ் வாழிய!

## மற்றெரு புலவர்

சோற்றுக்கும் குறைவில்லை ;
சொகுசான காவேரி
ஆற்றுக்கும் குறைவில்லை ;
அழகான சோலைவளர்
காற்றுக்கும் குறைவில்லை ;
கைகூப்பி நன்றியுடன்
போற்றுகிறேன் மன்ன ! நின்
புகழ்வாழி வாழியவே !

## விமலாதித்தன்

இராகம்-கௌளை

மாசில்லாத் தமிழ்த்தலைவா ! வற்ருத
பொன்னிவளம் மலிந்த செல்வா !
வீசுபுகழ்ச் செங்கோலின் முடியரசே !
குடியரசே ! வேந்தர் வேந்தே !
பாசமுடன் தமிழகத்தை ஒன்ருக்கிப்
பாராளும் திறனைப் பாடும்
ஆசையினுல் முந்துகிறேன் குந்தவியின்
தந்தையென அமைந்த கோவே !

இராகம்-ஆரபி

வெல்லுதற்கு மறவாத வீரவாள்
வேந்தே ! கேள் : வேற்று நாட்டு
மல்லிகையும் மணம் நல்கும் மாண்பதனை
மறவாத மன்னர் மன்ன !
கல்லெல்லாம் கவிசொல்லக் கலைக்கோயில்
கண்டபுகழ்க் கவிதை பாடும்
வல்லமையைத் தாவென்று சோணுட்டுத்
தமிழ் மண்ணை வணங்கினேனே.

# அறிஞர்களின் பாராட்டு

கலையை வெறுங்கலையாக்காமல் கடவுளாக்கிய காவலன் இராசராசன்... தெய்வீகக் கலை விளக்கம் கண்டவன் பண்டித சோழன். இராசராச சோழன் நாடகம் ஒரு பெரிய சமய உண்மையையே விளக்கி நிற்கிறது. ஆண்டவன் அனைத்துயிர்களையும் ஆட்டுவிக்கின்றான். எல்லாம் ஆடுகின்றன. ஆனால் ஆடுகின்ற எல்லாம் தம்தம் செயலால் ஆடுவதாக எண்ணுகின்றன. தாம் ஆட்டுவித்ததனால் அவை ஆடின என்று ஆண்டவன் உணர்த்துவது இருக்கின்றதே அதுவே சமய நெறியின் முடிவு. இராசராசனின் போக்கும் முடிவும் இதுதான். மன்னர் மன்னனை ஆடும் பொம்மையாக எண்ணி ஏமாந்தனர் மற்றவர். தான் எவ்வாறு அனைவரையும் ஆட்டுவித்தான் என்ற உண்மையை விளக்குகிறான் மன்னன். இதுவே நாடகத்தின் முடிவு. நம் மனத்தில் ஒரு வியப்பும் சாந்தியும் ஏற்படுகின்றது.

**—தருமபுரம் மகா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ. சுப்பிரமண்ய தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய சுவாமிகள்**

பண்டையத் தமிழர் இமயத்தின் சிகரத்திலே வீரத்தின் சின்னமாக, வில், கயல், புலிக்கொடிகளைப் பொறித்தனர். இன்றையத் தமிழர் தமிழ்க் கொடியை வீரத்தின் சின்னமாக இமயத்திலே, பொறிக்கும் சூழ்நிலை இல்லாவிட்டாலும், இராஜராஜ நாடகத்தின் மூலமாகத் தமிழ்க்கலைக் கொடியை இமயத்தையும் தாண்டி வட துருவம் வரையிலுங்கூடப் பறக்கவிடத்தக்க ஆற்றலுடையவர் என்பதைக் காட்டிவிட்டனர்.

அருள் நெறியைப் போற்றும் திருப்பணியை நாடக அரங்கமும் செய்யும் அற்புதத்தை இங்கே கண்டு மகிழ்ந்தேன்.

**—குன்றக்குடி அடிகள்**

சிங்கள அரசாங்கத்துடன் தமிழ் மொழியின் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஈழத் தமிழனாகிய எனக்கு 'இராஜ ராஜ சோழன்' புதியதோர் எழுச்சியையும் உணர்ச்சியையும் தருவதாக அமைந்துள்ளது.

**—தனி நாயகம் அடிகள்**
இலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்

சினிமாவினால் நாடகக்கலை அழிந்துவிடும் என்று முன்னர் பயந்ததுண்டு. ஆனால் இத்தகைய நாடகங்கள் அந்த பயத்துக்கு இடமே இல்லை என்பதை நிரூபித்துவிட்டன.

இராஜராஜ சோழன் நாடகத்தின் வெற்றி அதன் சீரிய லட்சியமேயாகும். என்னுடைய ஆசி மட்டுமல்ல. மக்களின் ஆசியும் அதற்கு உண்டு.

**—ராஜாஜி**

தமிழர் வீரம், தமிழ்க் காதல், தமிழ்ப் பண்பு, தமிழ் இசை, தமிழர் சமயம், நெறி யாவும் இந்த நாடகத்திலே நடமிடுகின்றன.

**—பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை**

எனதுள்ளத்தில் பொங்கியெழும் உணர்ச்சியை வார்த்தைகளால் சொல்ல இயலாது........'இராஜ ராஜ சோழன்' தமிழ் நாடக மேடையை வானளாவ உயர்த்திவிட்டது.

**—பேராசிரியர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர்**

தமிழனின் நற்பண்புகளையெல்லாம் சீரிய முறையிலே எடுத்துக் காட்டும் இந்த வரலாற்று நாடகத்தை மேடைக்குக் கொண்டுவந்த டி. கே. எஸ் சகோதரர்களைத் தமிழ்நாடு என்றும் மறக்காது.

**—நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை**

நடிகர்கள் காட்டி நடிக்கும் சுவையானது சுவைக்கிறவர்களிடம் கண்ணுடியில் பார்ப்பதுபோல் பிரதிபலிக்க வேண்டும். இந்த நாடகக் குழுவினரின் நடிப்பு ஒவ்வொன்றும் அப்படியே ரசிகர்களைக் கொள்ளைகொண்டுவிட்டது. இராஜராஜ சோழன், அவனுடைய மகள் குந்தவி இவர்களின் சம்பாஷணை மக்களை ஆட்கொண்டுவிட்டது......கலைஞர்கள் மக்களைவிடமுந்த வேண்டும் என்பது என் மனப்பூர்வமான ஆசை. இந்த ஆசைக்கு எல்லா வகையிலும் பொருத்தமானவர்கள் டி. கே. எஸ். சகோதரர்கள் என்றுதான் நான் சொல்லுவேன்.

**—பெரியார் ஈ. வெ. ரா**

மேல்நாட்டு நாடக மேடையைப் போல் நம் நாட்டு நாடக மேடையையும் சரியானபடி உருவாக்கி நாடகங்களை அருமையாக நடத்தி வருகிறவர்கள் டி. கே. எஸ். சகோதரர்கள். அவர்களால்தான் குடும்பத்துடன் கூச்சமில்லாமல் நாடகங்களைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு நம் மக்களுக்குக் கிடைத்தது. இராஜராஜ சோழனை எவ்வளவு புகழ்ந்தாலும் போதாது.

**—'தமிழவேள்' பி. டி. ராஜன்**

தமிழ் இசைக்கும் தமிழ்க் கலைக்கும் டி. கே. எஸ். சகோதரர்கள் ஆற்றிவரும் தொண்டு இராஜ ராஜ சோழன் நாடகம் முழுவதும் தெரிகிறது.

**—ராஜா சர் எம். ஏ. முத்தையா செட்டியார்**

இத்தகைய நாடகங்கள் தமிழ் நாட்டை உயர்த்துவனவாகும்.

**—கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம்**

காண்பவர் உள்ளங்களில் தமிழுணர்வும், தமிழகப்பற்றும், தூய சமய ஒழுக்கமும் மிகச் சிறந்த அளவில் பதியும்படி செய்யவல்லது டி. கே. எஸ். குழுவினர் நடித்துவரும், 'இராச ராச சோழன்' என்னும் நாடகமாகும்.

**—டாக்டர் இராசமாணிக்கனார்**

இராஜராஜ சோழன் நாடகத்தைப் பார்த்து பிரமித்துவிட்டேன். டி. கே. எஸ். சகோதரர்கள் தமிழ்ப்பண்பை வளர்த்து வருகிறார்கள். 1000 வருடங்களுக்கு முன்னால் நம்மை இழுத்துக்கொண்டுபோய் அந்தக் காலத்தைக் காட்டினார்களா? அல்லது இராஜராஜனே நேரில் இன்று வந்துவிட்டாரா என்பது தெரியவில்லை !

அவ்வை நடிப்பின் மூலம் 'அவ்வை' என்ற பெயரைப் பெற்றார் நடிகர் சண்முகம். அதேபோல் பகவதிக்கு நான் பட்டம் தருகிறேன் 'சோழன் பகவதி' என்று!

**—கி. ஆ. பெ. விசுவநாதம்**

பாலதேவரைப் போன்றவர்களின் சூழ்ச்சிகளுக்கு இரையாகாமல் 'தமிழர்களே ஒன்றுபடுங்கள்' என்று ஒவ்வொரு கணமும் உணர்த்துகிறது இராஜராஜ சோழன்.

**—கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்**

நான் இந்தமாதிரி நாடகத்தை இதுவரை பார்த்ததில்லை. டி. கே. எஸ். சகோதரர்களை "நாடகச் சக்கரவர்த்திகள்" என்று அழைக்கலாமென நினைக்கிறேன்.

**—சித்தூர் வி. நாகையா**

இந்த நாடகத்தை இவ்வளவு சிறப்பாகச் செய்வதற்கு சகோதரர்கள் எவ்வளவு சிரமப்பட்டிருப்பார்கள் என்பதை எண்ணும்போது என் போன்ற கலைஞனின் பாராட்டு ஆனந்தக் கண்ணீராகவே வெளிவருகிறது.

**—கொத்தமங்கலம் சுப்பு**

தமிழ் மொழிக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது என்பதை இராஜராஜ சோழன் நாடகம் எடுத்துக் காட்டுகிறது.

**—ஆர். மகாதேவன்**
'தேவன்'

இராஜராஜ சோழன் நாடகம் கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய நாடகம். தமிழ் நாட்டில், தமிழ் மொழியை, தமிழர் மானத்தை உயர்த்தும் நாடகம்.

**—இசை அரசு எம். எம். தண்டபாணி தேசிகர்**

இன்று ஆறாவது முறையாக இந்த நாடகத்தைக் காண்கிறேன். ஒவ்வொரு முறையும் புதிதாகப் பார்ப்பது போன்ற ஒரு உணர்ச்சி எனது உள்ளத்தில் ஏற்படுகிறது. இது நாடகக் குழுவினருடன் எனக்குள்ள நெருங்கிய தொடர்பால் ஏற்படுகின்றதோ என நானே ஐயுற்றேன். பின்னர், உண்மை அது அல்ல என்று தெரிந்தேன். எனது அனுபவத்தைத்தான் இந்த நாடகத்தைக் காணும் ஒவ்வொரு தமிழரும் அடைகின்றனர்.

**—ம. பொ. சி.**

இந்தியக் கலையையும், கலாசாரத்தையும் வெளிப்படுத்த இதுபோல் இன்னும் பல நாடகங்கள் வரவேண்டும். இராஜராஜ சோழன் நாடகம் தமிழ் நாட்டில் மட்டுமன்றி மற்றப் பகுதிகளுக்கும் திக்விஜயம் செய்ய வேண்டும்.

**—பிரதம நீதிபதி பி. வி. ராஜமன்னார்**
அகில இந்திய சங்கீத நாடகக் கழகத் தலைவர்

தமிழர்களுடைய வீரம், காதல், கடமை முதலிய பண்புகள் பழங் காலத்தில் எப்படிச் சிறந்து விளங்கின என்பதை ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டுவது இராஜராஜ சோழன்.

**—'திருக்குறள்' வி. முனுசாமி**

மின்சார விளக்குகள் அணைந்து அரங்கில் நாடக விழா ஆரம்பமான ஒரு சில வினாடிகளிலேயே, நாம் இன்றைக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இயங்கிக் கொண்டிருந்த பழந்தமிழ் நாட்டிற்குச் சென்றுவிடுகிறோம்.

**—பழைய கோட்டைப் பட்டக்காரர்**

நல்ல நாடகத்திற்கு ஓர் இலக்கியம் இராஜராஜ சோழன்!

**பேராசிரியர் எம். கே. சண்முகம்**

நாடகக் கலையின் வளர்ச்சியைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது இராஜராஜ சோழன்.

**—வி. சி. கோபாலரத்தினம்**

நாடகத் தமிழின் பண்டைப் பெருமையை இந்த நாடகம் நிலைநாட்டி விட்டது.

**—சேதுபதி மன்னர்**


எத்தனை தடவை பார்த்தாலும் சலிக்காத நாடகம் இராஜராஜசோழன்.

**—எஸ். ஏ. ஐயாசாமி செட்டியார்**

(பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட்)

இந்த நாடகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகெங்கும் நடத்த வேண்டும்.

**—நீதிபதி ஏ. எஸ். பி. ஐயர்**



பம்பாயில் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா தலைமையில் இராஜ ராஜனுக்குச் சிறப்பு நடந்தது.

நாடகத்தைப் பார்க்கும்போது எவ்வளவோ பெருமையாக இருக்கிறது. தமிழின் சக்தி நாடகம் முழுவதும் ஊடுருவி நிற்கிறது.

**—கோ. சாரங்கபாணி, சிங்கப்பூர்.**

வரலாற்றிலும் சிற்பத்திலும் கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் கண்டவாறே ஒவ்வொரு நுண்மையும் கண்டு ஆக்கப்பட்டுள்ள நாடகம் 'ராஜராஜ சோழன்.' இது முழுமை பெற்ற நாடகம்; வளமை பெற்ற நாடகம்.

**—பேராசிரியர் மு. இராசாக்கண்ணு, சிங்கப்பூர்.**

இராஜராஜ சோழன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கிட்டாரவை (கடாரத்தை வென்றான்); ஆனால் டி. கே. எஸ். சகோதரர்களின் 'இராஜ ராஜ சோழன்' சிங்கப்பூரையே வென்றுவிட்டான் கலை வடிவிலே.

**—எம். பி. டி. நாயர்**
(உதவி மந்திரி, சிங்கப்பூர்)

கருத்துச் செறிந்த நாடகம்; கவர்ச்சி நிறைந்த நாடகம்; 'இராஜராஜ சோழ'னுக்கு ஈடான ஒரு நாடகத்தை நான் இதுவரை கண்டதில்லை.

**—லோக் வான் தோ**
(சிங்கப்பூர் கத்தே நிறுவனத் தலைவர்)

அற்புதம், அற்புதம்! அனைத்தும் அற்புதம்!! 'இராஜராஜ சோழன் தமிழ் தெரியாதவர்களையும் பிரமிக்க வைக்கும் அரிய நாடகம்.


**—லீ சியூ மாங்**
(சீனர் சங்கத் தலைவர், சிங்கப்பூா)

தெள்ளு தமிழ்ச் சுவை நல்கும் தெவிட்டாத கவியின்பம் 'இராஜராஜ சோழன்'.

**—வீ. தி. சம்பந்தன்**
(மலேயா மந்திரி, கோலாலம்பூர்)

எத்தனை தடவை பார்த்தாலும் புத்தம் புதிய கலைச் சுவை தரும் அற்புதமான நாடகம்.

**—எஸ். ஓ. கே. உபயதுல்லா**
(பெடரல் சட்டசபை உறுப்பினர், கோலாலம்பூர்)



வேங்கையின் கூண்டில் விமலாதித்தன் வீர முழக்கம்.

# பத்திரிகைகளின் பாராட்டு

தமிழ் நாடக மேடைக்குப் பெருமை தேடித் தந்து கொண்டு இருக்கும் நல்ல நாடகம் 'இராஜராஜ சோழன்' என்பதில் இரண்டாவது அபிப்பிராயம் இருப்பதற்கில்லை.

**—ஆனந்த விகடன்**

தமிழ் மக்கள் எல்லோருமே இந்த நாடகத்தைப் பார்த்துவிட வேண்டும். அப்படிப் பார்ப்பதால் பழந்தமிழ் நாட்டின் உயர்ந்த பண்பாடு, கலை, நாகரிகம், வீரம், அன்பு, அறம் எல்லாம் எத்தகையவை என்பதை நன்றாக அறிந்துகொண்டு விடுவார்கள்.

**—கல்கி**

பத்து நூற்றாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த காட்சிகளை அழகிய ஜோடனையாலும், நடிப்புத் திறமையாலும் கண்ணெதிரில் கொணர்ந்து நிறுத்தினர் டி. கே. எஸ். சகோதரர்கள். வசனங்களும் பாடல்களும் அவர்களுக்குத் துணை புரிந்து தமிழகம் பெருமை பாராட்டக்கூடிய நாடக ஓவியமாகத் திகழ்ந்தது இராஜராஜ சோழன்.

**—தினமணி**

நாள்தோறும் தொடர்ந்து நடத்தினாலும் மாதக் கணக்கில் வெற்றிகரமாக ஓடக்கூடிய நல்ல நாடகம் இராஜராஜ சோழன்.

**—தமிழ்நாடு**

"காதலெனும் சக்தியினை" என்ற பாட்டு காதில் ரீங்காரம் செய்து கொண்டே யிருக்கிறது.

சோழர்களுக்குள் ராஜராஜன் எப்படியோ, அப்படியே நாடகங்களுக்குள் ராஜராஜ சோழன்.

**—குமுதம்**

டி. கே. எஸ். சகோதர்கள் நாடக மேடையில் மாத்திர மின்றி வெளியிலும் தமிழர் பண்பு, நாகரீகம், வீரம், சிறப்பு ஆகியவைகளைப் பரப்பி தமிழனின் உரிமைகளை வற்புறுத்தி வருகிறவர்கள். ஆகவே அவர்கள் மனத்துக்குப் பிடித்தமான நாடகத்தை நடிக்கும் போது வெற்றி ஒன்றைத்தான் நாம் காண முடியும்.

**—சுதந்திரம்**

யாராவது நம்மிடம் வந்து "நான் ரொம்ப ரொம்ப முதல்தரமான நாடகம் ஒன்று பார்த்திருக்கிறேன்" என்று சொன்னால் "ஓஹோ! டி. கே. எஸ். சகோதரர்களின் ராஜ ராஜ சோழனா?" என்று கேட்போம்.

**—தினமணி கதிர்**

கதைக் கட்டுக் கோப்பும் ராமநாதனின் தனிப்பட்ட வசனச் சிறப்பும் ரசிகர்களின் மனத்தை அப்படியும் இப்படியும் அலையவிடாது நாடகத்திலேயே இலயிக்க வைக்கின்றன.

**—பிரசண்ட விகடன்**

நாடகம் ஆரம்பமானவுடன் மறைந்துபோன சோழ குலக் குடும்பங்கள் மீண்டும் உயிர்பெற்று வந்தன.

—உமா

'இராஜராஜ சோழன்' தமிழ் நாடக மேடை வரலாற்றில் ஒரு மைல் கல்லாகத் திகழும் எனக் குறிப்பிட்டால் தவருகாது.

—நவ இந்தியா

இராஜ இராஜன் அன்று தன் பெயரை என்றும் நிலவச் செய்யத் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டினன். இன்று டி. கே. எஸ். சகோதரர்கள் இராஜ இராஜனுக்கே ஒரு கலைக்கோயில் எழுப்பிவிட்டார்கள்.

—கலாவல்லி

இராஜராஜ சோழன் மிக உயர்ந்த உன்னத தமிழ்க் கலைச் சித்திரம்: பார்ப்போர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் தெள்ளுதமிழ் சிருஷ்டி.

—ஜனசக்தி

வேங்கடமே தமிழகத்தின் வடக்கெல்லை. அதைக் காக்க வேண்டியது தமிழர் கடமை என்ற கருத்தே நாடகம் முழுவதும் ஊடுருவி நிற்கிறது...

—செங்கோல்

இராஜராஜ சோழன் டி. கே. எஸ். சகோதரர்களின் வெற்றிமட்டு மல்ல. தமிழ் நாடகக் கலையின் வெற்றி.

—விந்தியா

சரித்திரம் திரும்புகிறது என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி. அது நிஜமோ என்று எண்ணிவிடுவோம் ராஜராஜனை மேடையிலே காணும் பொழுது.

—கலாநிதி

இராஜராஜ சோழனைக் காணுத கண்கள் கண்களே அல்ல; பாராத பிறவி பிறவியே அல்ல!

—கோவைக் குரல்

சகோதரர்களின் அனுபவச் சிறப்பால் வல்லவர் தீட்டிய வண்ணச் சித்திரமாக்கப்பட்டுள்ளது இந்த வரலாற்று நாடகம். தமிழன் பார்க்கலாம். பார்த்துப் பெருமைப்படலாம்.

—பகுத்தறிவு

தமிழர் தலை நிமிர்ந்து நின்ற காலத்தையும், பண்டைத் தமிழரைப் பற்றிய பல விவரங்களையும் எடுத்துக் காட்டும் இந்த நாடகம் அவசியம் பார்க்கப்பட வேண்டிய நாடகந்தான்.

—நாரதர்

தமிழர் நெறியும், தமிழர் பண்பும், தமிழர் சமயமும், தமிழர் அன்பும், தமிழர் அறமும், பொங்கி வழியும் புதுவெள்ளப் பெருக்கு. தமிழர் அரசியலின் மனிதத் தன்மையைப் புவிக்குப் புரியவைக்கும் இனிய வரலாறு.

ஆம். நாடகக் கலையின் அரிய வெற்றி இதுதான். நம்மைத் தன் வயமாக்கிவிடுகிறது. உண்மையான நடிப்பு...

— ஞானசம்பந்தம்

தமிழும் தமிழ் மண்ணின் வீரமும், தமிழ் மக்களின் காதலும், தமிழ்க் காவிய நிழலும், நிலவ எழிலோங்கும் நாடகமாக அமைந்துள்ளது டி. கே. எஸ். குழுவினரின் " இராஜராஜ சோழன் ".

**—தமிழ் முரசு, சிங்கப்பூர்**

இராஜராஜ சோழன் ' நாடகம் டி. கே. எஸ். சகோதரர்களுக்கும் குழுவினருக்கும் மட்டுமின்றி தமிழ் நாட்டுக்கும் தமிழ்க் கலைக்குமே பெருமையளிக்கக்கூடிய முதல்தரமான நாடகம் என்பதில் சந்தேகமில்லை.

**—தமிழ் நேசன், கோலாலம்பூர்.**

' இராஜராஜ சோழன் ' நாடகம் எவ்வளவு அருமையாக இருக்கிறது! தமிழ் நாடக மேடை உண்மையில் மிக உயர்வானதுதான்.

**—சின் போ, சிங்கப்பூர்.**
(சீனத் தினசரி)

சங்கீதம், நாட்டியம், சித்திரம், வீரச் செயல்கள், இலக்கியம், ஹாஸ்யம், வேடப் பொருத்தம், நடிப்புத் திறன், ஒளி, ஒலி இத்தனையும் ஒருங்கே சிறப்பாக அமைந்து சிந்தனைக்கும் விருந்தாகத் திகழும் " இராஜ ராஜ சோழ "னைப் பார்க்காத கண்கள் பாக்கியம் செய்யாத கண்கள் என்று தான் கூற வேண்டும்.

**—சங்கமணி, கோலாலம்பூர்**

' இராஜராஜ சோழன் ' ஒரு மகத்தான நாடகம்.


**—மனோகரன், சிங்கப்பூர்.**

ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஒரு ராஜராஜ சோழன் தோன்றியிருக்கிறானோ என்று எண்ணும்படியாக இருக்கிறது.

**—மலைமகள், ஈப்போ.**

இராஜராஜ சோழன் நாடகத்தின் ஒவ்வொரு அங்கமும் உண்மைச் சம்பவங்களாக, உணர்ச்சியும் எழுச்சியும் ஊட்டும் சரித்திர ஏடுகளாக நம் கண்முன் விரிந்து நம்மையும் நாடகப் பத்திரங்களுடன் ஒன்றிவிடும்படி செய்கின்றன.

**—மலாயா நண்பன், சிங்கப்பூர்.**



# PRESS OPINIONS

In 39 scenes conceived and executed under the strong influence of the cinema, we are treated in this volume to a romantic version of an episode in the reign of Raja Raja Chozhan who flourished in the tenth century A. D.

**—Tne Hindu, Madras.**

The Tamils are noted for their appreciation of fine arts and they have seen many dramas. But it was on everybody's lips at the Annamalai Manram "Never a drama like Raja Raja Chozhan and that staged by T. K. S. Bros"

The audience were literally taken to an age the glory—that was Tamil Nad under the heroic cholas.

**—The Mail**

The drama depicts the great qualities of the Chola King whose power and glory extended beyond the Ganges about centuries ago.

The language of Aru Ramanathan who has written the script for the play, setting a record in the south, is not only pleasing to the ear but forcefully brings out the advanced culture of the chola dynasty. The script interpersed with ear catching lyrics composed by Puthaneri R. Subramanian has a literary content without being pedantic.

**—Indian Express**

The historical play " Raja Raja Cholan " enacted by T. K. S. Brothers, the well known professional drama troupe of Tamil Nad, is indeed a great attempt at bringing to the stage a vivid description of the glorious age gone by when several Tamil Kingdoms ruled vast areas of the South with glory and grandeur.

**—Hindusthan Tims, Delhi**

T. K. S. Brothers' "Raja Raja Cholan" presents a glorious chapter from Tamil History. The play was a big success and demonstrated once again the superiority of this professional troupe in stage technique.

**—Sport and Pastime, Madras**

The play is replete with the beauty of the Tamil language and Tamil Culture.

—**Swatantra, Madras**

This year, drama stole the thunder of music and dance. T. K. S. Brothers' new production "Raja Raja Choln" is a mammoth historical reaching the proportions of a documentary. The story is woven round historical acts and portrays the spacious days of cholas, when ethics, diplomacy, valour and religion co-existed The scenic background, sculptural settings, decor and music do create credit to T. K. S. Brothers who have lavished their all on it.

—**Sunday Chronicle, Bombay**

The historical play Raja Raja Chozhan depicting the greatness of Raja Raja Chozhan, (King of Kings), enacted on the inagural day, was repeatedly applauded by the large gathering present.

—**The Times of India, Bombay**

This great historical play, laid in the times of Raja Raja Chola, is a drama of mounting tensions culminating in a plot and its natural unravelling. Side by side with the deepening crisis in the love story of Vimaladitya and Kundavi (the theme of the main plot) is interwoven the love of the two court poets with Poonkothai. This interesting interlude relieves the tension of the main plot and is used to unravel the main plot.

—**The Sunday Standard, Bombay**

A fine study in statesmanship, 'Raja Raja Chozhan' is a gripping play of court intrigue and cunningness, of romance and heroism, which gives plenty of scope for suspenseful and moving situations.

—**The Bharat Jyoti, Bombay**

Raja Raja Cnozhan is excellent entertainment for all. It has broken all records in the field of Indian drama.

—**Malay Mail, Kulalumpur**

—o—




# Spider Knitting Co.,

TIRUPPUR





# N. KASIVISVANATHA AIYAR

11. EAST MADA STREET, MYLAPORE MADRAS 4


*Branches:* SOWCARPET, TRIPLICANE . T. NAGAR.
(421, MINT STREET) (1/72, BIG STREET) (17, USMAN ROAD)

⁕ உழைப்பிற்கும் உறுதிக்கும்

⁕ உண்மைத் தரத்திற்கும்

உத்திரவாதமுள்ள

# ஜனதா பனியன்கள்



# ஜனதா நிட்டிங் கம்பெனி

திருப்பூர்

தரத்தின் சிகரத்தில் தனி ஒளியுடன் பிரகாசிக்கும்

# "காப்டன்"

(Trade Mark Regd No 164093)




## சந்தன பேஸ் பவுடர்

(அனைவருக்கும் எக்காலத்திற்கும் இன்றியமையாத
தோர் சந்தன மணம் சிறந்த இளந்த சருமப்பாதுகாப்பு)

**ஸ்பெஷல் புனுகு பத்தி, மட்டிப்பால் பத்தி பூஜை பத்தி,
தர்பார் பத்தி தினுசுகளும் கலியாண விசேஷங்
களுக்கு உயர்ரக வாசனைக் கலவை
சந்தனம், பன்னீர், அரகஜா, உயர்ரக
செண்ட், அத்தர் தினுசுகளும்,
வாசனைப்பாக்கு முதலியவை
களும், கிடைக்கும்.**

MFRS:

**M. K. AZEEZ & SON, Perfumers, Mathurai**


Printed at the Asian Printers, Madras - 5.

Phone : 71188

கலியாணங்களுக்கும், சாதாரண தேவைக்கும்

பட்டுச் சேலைகள், டிஷ்யூ,

கிரேப் சேலைகளுக்கு

கியாதி வாய்ந்தது



# ராதா ஸில்க் எம்போரியம்

உற்பத்தியாளர் & விற்பனையாளர்

சன்னதித் தெரு, மயிலாப்பூர், சென்னை - 4

DIGITIZED
BY
TAMIL VIRTUAL ACADEMY






விஜயம்

செய்யுங்கள்!





நவீன

தங்க நகைகள்,

வெள்ளி பாத்திரங்களுக்கு





ஸ்ரீ பவானி ஜுவலரி

65. பைகிரப்ட்ஸ் ரோட்.. திருவல்லிக்கேணி... சென்னை.5.

VARAN